**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 71/2025**

**Dated: 06.07.2026**

**Deposition of Witnesses for PW - 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.ராஜ்குமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Thiru.Vinothkumar, Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர். இருதரப்பும் வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சிவகங்கை **NIB-CID** -ல் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2024-ம் தேதி சார்பு ஆய்வாளர் திரு.ஜெகதீசன் அவர்களுக்கு காலை 07.05 மணிக்கு போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலை உயர் அதிகாரிகளுக்கும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நிலையத்தில் இருந்த என்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் குமார் என்பவரையும் தக்க உபகரணங்களை எடுத்து கொண்டு 7.15 மணிக்கு புறப்பட்டு சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகே 7.30 மணிக்கு சென்று தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்து கொண்டிருந்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர்களை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு செல்ல நாங்கள் அவரை நிறுத்த முற்படும்போது ஓட முயற்சித்தவரை பிடித்தோம். சார்பு ஆய்வாளர் தனது அடையாள அட்டையை காண்பித்து நாங்கள் **NIB-CID** போலீசார் என

அறிமுகப்படுத்திக் கொண்டோம். சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் தனக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலை அந்த நபரிடம் எடுத்து கூறியும் அவரை சோதனை செய்ய வேண்டுமென சொன்னார். அப்போது சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் பெயர் விலாசம் கேட்டார். அந்த நபர் தனது பெயர் ராஜசேகர், வயது.34, த/பெ.கமலநாதன், எண்.15, புதுவயல் சாக்கோட்டை அஞ்சல் என்று கூறினார். தங்களை சோதனை செய்ய வேண்டுமெனில் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய வேண்டுமென்று கூறினார். அதற்கு எதிரி தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில் அவரது விருப்பத்தின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் என்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.குமார் என்பவரையும் சாட்சியாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் எதிரியிடமும் எங்களிடமும் கையொப்பம் பெற்றார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 1-வது கையொப்பம் என்னுடையது தான். அந்த **சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரி தன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை அவர் சோதனைக்கென சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். எதிரி வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சார்பு ஆய்வாளர் பெற்று நாங்கள் சோதனை செய்து பார்த்தபோது அதில் விதை, இலை, பூ, மொட்டுடன் கூடிய கஞ்சா என்னும் போதை பொருள் இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து எரித்து பார்த்தபோது அதில் கஞ்சா வாடை வந்தது. நாங்கள் எங்களது பணி பயிற்சியின் அடிப்படையில் அந்த வாடை கஞ்சா வாடை என்பதால் அது கஞ்சா என உறுதி செய்து கொண்டோம். பின்னர் அதனை சார்பு ஆய்வாளர் எடை தராசில் எடை போட்டு பார்க்க 2.100 கிகி கஞ்சா இருந்தது. அதை அதே வெள்ளை நிற சாக்கு பையில் மடித்து கட்டி NIB SVG என சீல் வைத்தும் விபர லேபிள் ஒட்டி அதில் சாட்சிகளாக நாங்களும் எதிரியும், சார்பு ஆய்வாளரும் கையொப்பம்

செய்தோம். அதற்கான அத்தாட்சி என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி ஆகும். அதிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த **அத்தாட்சி அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி சட்ட விரோதமாக கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக 9.00 மணிக்கு கைது அறிக்கை தயார் செய்து உறவினரான கற்பகம் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தும் எதிரியை கைது செய்தார். அதற்கான கைது அறிக்கையில் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த **கைது அறிக்கை அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து என் முன்னிலையிலும் குமார் முன்னிலையிலும் கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் குமாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மற்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களுடன் 10.15 மணிக்கு நிலையம் வந்து சிவகங்கை NIB – CID குற்ற எண்.14/2024 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். பின்பு காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் என்பது ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்றோம். எங்களது ஆய்வாளர் விசாரணையில் எந்த வாகனத்தில் சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர்

விசாரணையில் தராசு, படிகற்கள் எடுத்து சென்றதாகவோ அல்லது எலக்ட்ரானிக் தராசு எடுத்து சென்றதாகவோத சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், தகவல், அத்தாட்சி ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். தகவலில் ஆய்வாளர் பெற்றுக் கொண்டதாக கையொப்பம் செய்யும் போது நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தகவலை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கையொப்பம் பெற்றதால் தான் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்குள்ள உரிமையை NDPS சட்டப்படி முறையாக எடுத்து சொல்லி சம்மதம் பெறவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக எந்த ஆவணமும் தயார் செய்தாலும் இடது பக்கமோ அல்லது வலது பக்கமோ தான் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரியிடம் இடைசொல்லாக நடுவில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைது அறிக்கையில் எதிரியின் உறவினருக்கு தகவல் சொன்னதாக வாசகம் இடபெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் SHO முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்த எதிரியை அழைத்து வந்து காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து அதற்கு ஆதரவாக மேலதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் கஞ்சாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரி எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 71/2025**

**Dated: 06.07.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.குமார்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Thiru.Vinothkumar, Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர். இருதரப்பும் வழக்கறிஞர்கள் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைபட்டிணம் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 11.12.2024-ம் தேதி NIB-CID சிவகங்கை காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் திரு.ஜெகதீசன் அவர்களுக்கு காலை 07.05 மணிக்கு போன் மூலம் கிடைத்த ரகசிய தகவலை உயர் அதிகாரிகளுக்கும் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நிலையத்தில் இருந்த என்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமார் என்பவரையும் தக்க உபகரணங்களை எடுத்து கொண்டு 7.15 மணிக்கு புறப்பட்டு சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் அருகே 7.30 மணிக்கு சென்று தகவலாளியை சந்தித்து விட்டு கண்காணித்து கொண்டிருந்தபோது வெள்ளை சாக்கு பையுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர்களை தகவலாளி அடையாளம் காட்டிவிட்டு

செல்ல நாங்கள் அவரை நிறுத்த முற்படும்போது ஓட முயற்சித்தவரை பிடித்தோம். சார்பு ஆய்வாளர் தனது அடையாள அட்டையை காண்பித்து நாங்கள் NIB-CID போலீசார் என அறிமுகப்படுத்திக் கொண்டோம். சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் தனக்கு கிடைத்த நம்பகமான ரகசிய தகவலை அந்த நபரிடம் எடுத்து கூறியும் அவரை சோதனை செய்ய வேண்டுமென சொன்னார். அப்போது சார்பு ஆய்வாளர் அந்த நபரிடம் பெயர் விலாசம் கேட்டார். அந்த நபர் தனது பெயர் ராஜசேகர், வயது.34, த/பெ.கமலநாதன், எண்.15, புதுவயல் சாக்கோட்டை அஞ்சல் என்று கூறினார். தங்களை சோதனை செய்ய வேண்டுமெனில் அருகிலுள்ள நீதித்துறை நடுவர் அவர்களிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அதிகாரியிடமோ அழைத்து சென்று சோதனை செய்ய வேண்டுமென்று கூறினார். அதற்கு எதிரி தாங்களே சோதனை செய்யலாம் என கூறியதன் பேரில் அவரது விருப்பத்தின் அடிப்படையில் சார்பு ஆய்வாளர் என்னையும் சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜ்குமார் என்பவரையும் சாட்சியாக நியமித்து சோதனை சம்மத கடிதம் தயார் செய்து அதில் எதிரியிடமும் எங்களிடமும் கையொப்பம் பெற்றார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 2-வது கையொப்பம் என்னுடையது தான். அந்த சோதனை சம்மத கடிதம் அதசாஆ.1 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் எதிரி தன் கையில் வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை அவர் சோதனைக்கென சார்பு ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். எதிரி வைத்திருந்த வெள்ளை நிற சாக்கு பையை சார்பு ஆய்வாளர் பெற்று நாங்கள் சோதனை செய்து பார்த்தபோது அதில் விதை, இலை, பூ, மொட்டுடன் கூடிய கஞ்சா என்னும் போதை பொருள் இருந்தது. அதில் சிறிதளவு எடுத்து எரித்து பார்த்தபோது அதில் கஞ்சா வாடை வந்தது. நாங்கள் எங்களது பணி பயிற்சியின் அடிப்படையில் அந்த வாடை கஞ்சா வாடை என்பதால் அது கஞ்சா என உறுதி செய்து கொண்டோம். பின்னர் அதனை சார்பு ஆய்வாளர் எடை தராசில் எடை போட்டு பார்க்க 2.100 கிகி கஞ்சா இருந்தது. அதை

அதே வெள்ளை நிற சாக்கு பையில் மடித்து கட்டி NIB SVG என சீல் வைத்தும் விபர லேபிள் ஒட்டி அதில் சாட்சிகளாக நாங்களும் எதிரியும், சார்பு ஆய்வாளரும் கையொப்பம் செய்தோம். அதற்கான அத்தாட்சி என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அத்தாட்சி ஆகும். அதிலுள்ள 2-வது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த அத்தாட்சி அதசாஆ.2 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி சட்ட விரோதமாக கஞ்சா விற்பனைக்கு வைத்திருந்த குற்றத்திற்காக 9.00 மணிக்கு கைது அறிக்கை தயார் செய்து உறவினரான கற்பகம் என்பவருக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தும் எதிரியை கைது செய்தார். அதற்கான கைது அறிக்கையில் நானும் சிறப்பு சார்பு ஆய்வாளர் ராஜ்குமாரும் கையொப்பம் செய்தோம். அந்த கைது அறிக்கை அதசாஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரி எவ்வித அச்சுறுத்தலும் துன்புறுத்தலுமின்றி தானாக முன்வந்து என் முன்னிலையிலும் ராஜ்குமார் முன்னிலையிலும் கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் பதிவு செய்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ராஜ்குமாரும் சாட்சி கையொப்பம் செய்துள்ளோம். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள என்னுடைய சாட்சி கையொப்பம் மட்டும் அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் சார்பு ஆய்வாளர் எதிரி மற்றும் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களுடன் 10.15 மணிக்கு நிலையம் வந்து சிவகங்கை NIB - CID குற்ற எண்.14/2024 சட்ட பிரிவுகள் 8(c) r/w 20(b)(ii)(B) of NDPS Act-ன்படி வழக்கு பதிவு செய்ய உதவியாக இருந்தேன். பின்பு காவல் ஆய்வாளர் விசாரிக்க நடந்த விவரம் சொன்னேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சிவகங்கை தாலுகா பெருமாள்பட்டி பஸ் ஸ்டாப் என்பது ஜனநடமாட்டம் மிகுந்த பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் எங்களுக்கு சொந்தமான இருசக்கர

வாகனத்தில் சென்றோம். எங்களது ஆய்வாளர் விசாரணையில் எந்த வாகனத்தில் சென்றோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் விசாரணையில் தராசு, படிகற்கள் எடுத்து சென்றதாகவோ அல்லது எலக்ட்ரானிக் தராசு எடுத்து சென்றதாகவோத சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதம், தகவல், அத்தாட்சி ஆகியவற்றை யார் எழுதினார் என்றால் சார்பு ஆய்வாளர் தான் எழுதினார். தகவலில் ஆய்வாளர் பெற்றுக் கொண்டதாக கையொப்பம் செய்யும் போது நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தகவலை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து கையொப்பம் பெற்றதால் தான் நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. சோதனை சம்மத கடிதத்தில் எதிரிக்குள்ள உரிமையை NDPS சட்டப்படி முறையாக எடுத்து சொல்லி சம்மதம் பெறவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக எந்த ஆவணமும் தயார் செய்தாலும் இடது பக்கமோ அல்லது வலது பக்கமோ தான் கையொப்பம் செய்வார்கள் என்றால் சரிதான். சோதனை சம்மத கடிதத்தில் எதிரியிடம் இடைசொல்லாக நடுவில் கையொப்பம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். கைது அறிக்கையில் எதிரியின் உறவினருக்கு தகவல் சொன்னதாக வாசகம் இடபெறவில்லை என்றால் சரிதான். அத்தாட்சியில் SHO முத்திரை வைக்கப்படவில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில் சம்பவ எதுவும் நடைபெறவில்லை என்றும் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்து எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல. வீட்டிலிருந்த எதிரியை அழைத்து வந்து காவல் நிலையத்தில் அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து அதற்கு ஆதரவாக மேலதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால்

சரியல்ல. எதிரிக்கும் கஞ்சாவிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

எதிரி எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றம் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.